## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| | | | |
|---|---|---|---|
| 2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 07–ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869 ம் ஆண்டு சட்ட எண்.44 வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **தங்கப்பாண்டியன்** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**07.07.2025** **OS.No. 139/2019** **வா.சா. 1 ஆஜர்**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். எனது தரப்பில் பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து பின்பு அதில் நான் கையொப்பம் செய்தேன் . பிரமான வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

கடந்த 02.09.1970 ம் வாதியின் தந்தை முருகேசன் என்பவரால் முருகப்ப செட்டியாரிடமிருந்து ஆவண எண்.1722/1970 என்ற எண்ணில் தாவாச் சொத்தை கிரையம் பெற்றதற்கான கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் . **<u>அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** கடந்த 20.05.2010 ம் தேதி வாதியின் தந்தை முருகேசன் 08.02.1997 ல் இறந்து போனதற்குரிய இறப்புச் சான்றிதழ் நகல்(அசலுடன் ஒப்புமை செய்யப்பட்டது) தாக்கல் செய்கிறேன். **<u>அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** கடந்த 08.07.2010 ம் தேதி முருகேசன் என்பவரது வாரிசுச் சான்று நகல் தாக்கல் செய்கிறேன் (அசலுடன் ஒப்புமை செய்யப்பட்டது). **<u>அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** 24.10.2018 ம் தேதி வாதி பெயருக்கு 2018–2019 ம் ஆண்டுக்கான ஏனாதி–தேனி ஊராட்சிக்கு வாதி செலுத்திய வீட்டு வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன் . **<u>அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** வாதியின் தந்தை பெயருக்கு இருந்து வரும் மின் இணைப்பு 430 க்கு வாதி செலுத்திய மின் கட்டண ரசீது இணைய வழி நகல் தாக்கல் செய்கிறேன் . **<u>அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** 01.11.2018 ம் தேதி பிரதிவாதிகளின் தந்தை பாலசுப்பிரமணியன் பெயரையும் சேர்த்து மோசடியாக கிராமக் கணக்குகளில் ஏற்படுத்தப்பட்டதற்கான நத்தம் நிலவரித்திட்ட துூய அடங்கல் அ பதிவேடு தாக்கல் செய்கிறேன் . **<u>அது வா.சா.ஆ.6 ஆக(பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன்) குறியீடு செய்யப்படுகிறது.</u>** 01.11.2018 ம் தேதி பிரதிவாதிகளின் தந்தை பாலசுப்பிரமணியன் பெயரையும் சேர்த்து மோசடியாக கிராமக் கணக்குகளில் ஏற்படுத்தப்பட்டதற்கான நத்தம் நிலவரித்திட்ட துூய சிட்டா தாக்கல் செய்கிறேன்.

**அது வா.சா.ஆ.7 ஆக(பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன்) குறியீடு செய்யப்படுகிறது.** தாவாச் சொத்துக்குரிய புலப்பட வரைபடம் நகல் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.8 ஆக (பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன்) குறியீடு செய்யப்படுகிறது.** 27.11.2018 ம் தேதி வாதியால் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியரிடம் தாக்கல் செய்த மேல்முறையீடு மனு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

கடந்த 03.09.2024 ம் தேதி நீதிமன்ற ஆணையர் அறிக்கை அசல் **நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 03.09.2024 ம் தேதியிட்ட நீதிமன்ற ஆணையர் வரைபடம் அசல் **நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிராதுபடி தீர்ப்பு செய்ய பிரார்த்திக்கின்றேன்.

## குறுக்கு விசாராணை

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam